**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**

**கிருஷ்ணராயபுரம்.**

**<u>முன்னிலை</u> : திரு.ஆர்.பாக்கியராஜ், பி.ஏ., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கிருஷ்ணராயபுரம்.**

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10-ம் நாள் வெள்ளிக்கிழமை

**<u>இடைக்கால மனு எண்.4/2025</u>**

**<u>in</u>**

**<u>அசல் வழக்கு எண். 34/2024</u>**

சிவா வயது 42, த/பெ. ஜெயமணி, கள்ளப்பள்ளி தெற்கு, கள்ளப்பள்ளி கிராமம், கிருஷ்ணராயபுரம் வட்டம், கரூர் மாவட்டம். .... மனுதாரர்/வாதி

**//எதிர்//**

1. காளீஸ்வரி வயது 37, க/பெ. முரளி
2. முரளி வயது 42, த/பெ. முத்தையன்

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் முகவரி:-
கள்ளப்பள்ளி தெற்கு, கள்ளப்பள்ளி கிராமம், கிருஷ்ணராயபுரம் வட்டம், கரூர் மாவட்டம். .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

**<u>உத்தரவு</u>**

இந்த மனு, மனுதாரர்/வாதியால் உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17 மற்றும் 151 ன் கீழ் தாவாவில் சொத்துவிவரத்தை திருத்தம் செய்ய அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| மனு தாக்கல் செய்த நாள் | - 27.09.2024 |
| மனு மீது வில்லை | - ரூ.20.00 |

இந்த மனு, கடந்த 24.09.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.செல்வம் B.Sc.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில்

கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.சரவணன் B.Com.,B.L., அவர்கள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையையும், இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**தீர்ப்பாணையுரை–**

1. இறுதியாக, மனு அனுமதிக்கப்படுகிறது.
2. செலவுத் தொகை இல்லை.
3. வழக்குரை சொத்து விபரத்தில் நான்கு எல்லைகள் சேர்ந்து திருத்தம் செய்ய அனுமதிக்கப்படுகிறது.

**தாவா சொத்து விபரம்**

**A பட்டியல் சொத்து :–**

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம், கள்ளப்பள்ளி கிராமம், நன்செய் புல எண்.103/7C ல் ஹெக்.0.01.00 ஏர்ஸ் முழுவதும்

**B பட்டியல் சொத்து**

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம், கள்ளப்பள்ளி கிராமம், புஞ்செய் புல எண்.103/7B ல் ஹெக்.0.36.50 ஏர்ஸ் முழுவதும்

**C பட்டியல் சொத்து**

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம், கள்ளப்பள்ளி கிராமம், நத்தம் தோராய மனைவரிப்பட்டா எண்.425–க்கு உட்பட்ட நத்தம் புல எண்.254/2 ல் ஹெக்.0.0.14 ஏர்ஸ் உள்ள மனை மற்றும் அவற்றிற்கான மாமூல் தட நடை பாதை பாத்தியம் உட்பட.

2025ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10 ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையிட்டு வழங்கப்பட்டது.

**ஒம்/திரு.ஆர்.பாக்கியராஜ்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கிருஷ்ணராயபுரம்.**